# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்

## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

30.08.2019–ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

083. வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN 25-Z–8969 பழுது ஏற்பட்டுள்ளதை அவசரம் அவசியம் கருதி குடிநீர் அவசியத்தை முன்னிட்டு சீர்செய்யப்பட்டது. தொகை ரூ.1170/–ஐ செலவினம் மேற்கொண்டது மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசரம் அவசியம் கருதி, குடிநீர் அவசியம் என்பதால் உடன் பழுது பார்த்தது தொகை ரூ.1170/–ஐ வழங்கியதை மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண். 2019/எச்1, நாள்.09.08.2019)

084. வந்தவாசி நகராட்சியில் 2019ம் வருடம் ஆகஸ்ட்மாதம் 15ம் நாளன்று சுதந்திரதினவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேற்படி சுதந்திர தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.3450/–ஐ வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

2.அவசரம் அவசியம் கருதி, செலவினம் மேற்கொண்டது.

தொகை ரூ.3450/–ஐ வழங்கியதை மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.0185/2019/எச்1, நாள்.16.08.2019)

085.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06,07,17,20,21 மற்றும் 24–ளில் உள்ள HDPE TANK மற்றும் 1 HP மின்மோட்டார் பொருத்தும் பணி செய்த வகையில் தொகையினை வழங்கிட ரூ.1,20,000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

2.அவசரம் அவசியம் கருதி, நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் செலவினம் ரூ.1,18,329/ –வழங்குமாறு ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.1189/2019/இ1, நாள்.06.08.2019)

**086.**வந்தவாசி நகராட்சியில் கடந்த 20 ஆண்டு காலத்திற்கும் மேலான காலத்திற்கும் உள்ள கீழ்வரும் விபரத்தில் கண்டவாறு பழைய வைப்புத்தொகைகள் மற்றும் பழைய மாதாந்திர குடிநீர் கட்டணங்களுக்கு திருத்தம் செய்யவும் மற்றும் நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர குடிநீர்கட்டணம் விவரம். | |
|---|---|---|---|
| 1 | குடியிருப்பு உபயோகம் | பழைய வைப்புத் தொகை ரூ.4000/– | புதிய வைப்புத் தொகை ரூ.8000/– |
| | | பழைய மாதாந்திர கட்டணம் ரூ.42/– | புதிய மாதாந்திர கட்டணம் ரூ.125/– |
| 2 | குடியிருப்பு அல்லாத உபயோகம் | பழைய வைப்புத் தொகை ரூ.10000/– | புதிய வைப்புத் தொகை ரூ.16000/– |
| | | பழைய மாதாந்திர கட்டணம் ரூ.102/– | புதிய மாதாந்திர கட்டணம் ரூ.250/– |
| 3 | தொழிற்சாலை உபயோகம் | பழைய வைப்புத் தொகை ரூ.10000/– | புதிய வைப்புத் தொகை ரூ.25000/– |
| | | பழைய மாதாந்திர கட்டணம் ரூ.102/– | புதிய மாதாந்திர கட்டணம் ரூ.500/– |

<u>அலுவலககுறிப்பு–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வந்தவாசி நகராட்சியில் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகைகள் மற்றும் குடிநீர் கட்டணங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட 20 ஆண்டுகளில் மின் கட்டணம் மாறியுள்ளதாலும், குடிநீர் பராமரிப்பு செலவுகள், குடிநீர் விநியோகம் பொருட்கள் செலவுகள், குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் ஊதியம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் மற்றும் இதரசெலவினங்கள் பன்மடங்கு உயர்ந்து, உள்ளபடியாலும் நிர்வாக நலன் கருதி மேற்கண்ட செலவினங்களை ஈடுசெய்திடவும் அவசரம் அவசியம் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட விவரங்களை செய்தித்தாளில் விளம்பரம் செய்யவும், பொதுமக்களின் வரவேற்பு ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் அதனை

(ந.க.எண்.1314/2019/அ1, நாள்.14.08.2019)

087. வந்தவாசி நகராட்சி பகுதியில் வருகின்ற காலம் மழைக்காலம் என்பதால் டெங்கு நோய் உள்ளிட்ட தொற்று நோய்கள் பெருந்தாக்க அளவில் தோன்றாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க டெங்கு நோய் தடுப்பு மஸ்தர்களை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4414/2019/பஈ2, நாள் 02.08.2019ன் படி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை அவர்களின் ந.க.எண்.2833/இ4/2013 நாள்.06.08.2019ன் படி வந்தவாசி நகராட்சி பகுதியில் டெங்கு நோய் தடுப்பு பணிக்காக 01.08.2019 முதல் 31.10.2019 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணி செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.. எனவே வந்தவாசி நகராட்சியில் 30 நபர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.200 என்கிற அடிப்படையில் நியமித்துக்கொள்ளவும், அதற்கு தோராய செலவினம் ரூ.6,00,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.209/2019/எச்1, நாள்.07.08.2019)

088. வந்தவாசி நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மூன்று திறந்தவெளி கிணறுகளுக்கு ஆழப்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் .2019 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | P.முருகேசன் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு |
| 2. | N.திருநாவுக்கரசு | மதிப்பீட்டைவிட 0.11 % அதிகம் |

அலுவலககுறிப்பு–

1.மன்றம் முடிவு செய்யலாம்.

2.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.04 % வரப்பெற்றுள்ள திரு.P.முருகேசன் ,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க.எண்.792/2019/இ1)

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி